*KALANJIYAM – International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

**களஞ்சியம்**
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.44

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

# சிலப்பதிகாரத்தில் நிகழ்த்துக் கலைகள்

*Performing Arts in Silappathikaram*

Dr.C.Kurinji[1,*], Dr.S.Brindha[1], Dr.R. Kodeeswari[2]

[1] Assistant Professor, Department of Tamil, Tamil Advanced Research Centre, Ganesar College of Arts and Sciences (Affiliated with Bharathidasan University), Melaisivapuri, Pudukkottai, Tamilnadu, India.

[2] Assistant Professor, Department of Tamil, Tamilavel Umamaheswaranar Karanthai Arts College, Karanthai, Thanjavur, Tamilnadu, India.

***Corresponding author:** Dr.C.Kurinji, kurinji.1909@gmail.com

**ARTICLE INFO**

**Article history**
Received: 10 October 2026
Revised: 20 October 2026
Accepted: 28 October 2026

**Article ID**
KIJTS-2026-0023

**Peer review**
Double-blind peer review

**Keywords**
Art
Dance
Imagination
Musical Modes (Panns)
Musical Songs
Dance Stage
Musical Instruments.

**ABSTRACT**

Sangam literature, regarded as classical literary works, portrays the rich and meaningful lives of ancient Tamils. Through Sangam literature, we can understand the art, culture, civilization, lifestyle, religious practices, beliefs, customs and traditions of ancient Tamil society. Human beings, who lived in harmony with nature, carefully observed its various characteristics and creatively transformed their emotions and experiences into artistic expressions, thereby giving rise to different forms of art. These art forms flourished through the application of human knowledge, creativity and skills. This article explains the various forms of performing arts found in the Tamil epic Silappathikaram and highlights their significance in ancient Tamil society.

**How to cite this article:** Dr.C.Kurinji, Dr.S.Brindha, & Dr.R. Kodeeswari (2026). சிலப்பதிகாரத்தில் நிகழ்த்துக் கலைகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 542–552. https://doi.org/10.63300/kijts603112026.44
**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

**முனைவர் சி. குறிஞ்சி[1], முனைவர் சே. பிருந்தா[2]& முனைவர் ரா. கோடீஸ்வரி[3]**

[1]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ் உயராய்வு மையம், கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலசிவபுரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.

[2]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ் உயராய்வு மையம், கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலசிவபுரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.

[3]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), கரந்தை, தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

செவ்வியல் பனுவல்கள் என்று அழைக்கப்படும் சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழர்கள் வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்வை எடுத்துக்கூறும் தன்மையவை. சங்க இலக்கியங்கள் மூலம் பண்டைத் தமிழர்களின் கலை, பண்பாடு, நாகரிகம், வாழ்வியல், இறைவழிபாடு, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலானவற்றை அறிய முடிகிறது. இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தவன் மனிதன் அதன் இயல்புகளைக் கூர்ந்து நோக்கி அவற்றுடன் தன்னுடைய உணர்வுகளைத் திறமையாகச் செயல் உருவாக்கம் செய்து சில கலைகளைத் தோற்றுவித்திருக்கிறான். அறிவுத் திறனால் செயலாக்கம் பெற்ற பின் கலைகள் சிறப்புடன் வளர்க்கப்பட்டன. இத்தகைய கலைகள் சிலப்பதிகாரத்தில் இருக்கின்ற என்பதனை இக்கட்டுரை விளக்குகின்றது.

**கருவிச் சொற்கள்**

கலை, ஆடற்கலை, கற்பனை, பண்கள், இசைப்பாடல், ஆடலறங்கு, இசைக்கருவி.

**முன்னுரை**

தமிழ்ப் பெருமக்களின் வளமான வாழ்வானது கலையார்வத்தினைத் தூண்டிய வண்ணம் கலைக் கற்பனையுடன் வளரலாயிற்று. அவர்களின் சமயவுணர்வும் கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அதனை வளர்க்கச் செய்தது. இக்கலைகளின் சிறப்புகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிலப்பதிகாரத்தினை இயற்றி இருக்கின்றனர். மனத்துள் தோன்றும் கற்பனைகள் ஒரு கட்டமைப்பை உருவாக்குகின்றன. இக்கட்டமைப்பு பின்னர் கலையாக உருவெடுக்கிறது.

**சிலம்பில் ஆடற்கலை**

கூத்து தமிழர்களின் பாரம்பரிய நாட்டார் கலை வடிவங்களில் ஒன்று. கிராமத்தின் மண்வாசனையையும், கிராம மக்களது வாழ்வாதாரங்களையும், அவர்கள் மதம் மீது கொண்ட பற்றுதலையும் வெளிப்படுத்தும் வகையில் அமைவது கூத்துக்கலை. கூத்துக்கள் பல்வேறு செய்திகளை சமூகத்திற்குச் சொல்கின்றன. முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் பொழுதுபோக்கிற்காகவும், தங்களது களைப்பைப் போக்கும் செயற்பாடாகவும் ஒரு முற்றத்தில் ஒன்று கூடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அதுவே நாளடைவில் பல்வேறு பரிணாமங்களைப் பெற்று கலைகளாகத் தோற்றம் பெற்றது. அவர்கள் அன்று பொது முற்றத்தில் ஆடியவை இன்று கூத்து என்ற பெயரைப் பெற்று வளர்ந்து நிற்கின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இந்தக் கூத்துக்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்தக் கூத்துக்களின் கதையம்சமும்,

கூத்துக்களினூடாக கூறப்படும் செய்திகளும் தற்போதைய சமூகத்தினரையும் ஈர்ப்பவையாக அமைந்துள்ளன.

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதற் காப்பியமாகும். இது காப்பியமாக மட்டுமல்லாமல் இசைத்தமிழ்க் காப்பியமாகவும், நாடகத் தமிழ்க் காப்பியமாகவும் விளங்குகிறது. இதனால் இதனை முத்தமிழ்க் காப்பியம் என்பர். இந்நூல் இசை இலக்கணம் பற்றியும், ஆடல் இலக்கணம் பற்றியும் உரைக்கின்றது. பழங்கால இசைக்கருவிகள், பண்கள் பற்றிய செய்திகள் பற்றியும், இசைப்பாடல் வகைகள் போன்ற இசை பற்றிய செய்திகளையும், ஆடல் ஆசிரியன், அமைதி, ஆடலரங்கேற்ற நிலை ஆடலரங்கில் பங்கு பெறும் இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையோன், குழலோன் போன்றோர்களின் அமைதிகள், அரங்க அமைதி, அரங்கிற் புகுந்து ஆடுகின்ற இயல்பு போன்றன பற்றியும் சிலப்பதிகாரம் வாயிலாக அறிய முடிகின்றது. இவ்வகையில் இந்நூல் இசை, ஆடல், இலக்கண நூலாகவும், இவ்விலக்கண உருவாக்கத்திற்குரிய இலக்கியமாகவும் அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்திற்கு எழுந்த உரைகளான அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் உரை ஆகியவை தொல்காப்பிய நூலுக்கு எழுந்த உரை நூல்கள் போல் அமைந்துள்ளன. இவ்வுரைகளின் வாயிலாக ஆடல் இசை பற்றிய அரிய விளக்கங்களைப் பெற முடிந்துள்ளது. அடியார்க்கு நல்லார் உரை வாயிலாக மறைந்துபட்ட இசை ஆடல் இலக்கண, இலக்கிய நூற்கள் பற்றியும் அவர் காலத்தில் நிலவிய நூல்கள் பற்றியும் அறிந்துணரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் பல்வேறு நூல்கள் மூலம் பெறப்பட்ட செய்திகள் பலவற்றையும் அறிந்துணரும் நிலையில் அது அமைந்துள்ளது.

**ஆடலாசான் அமைதி**

ஆடலாசான் அகக்கூத்து, புறக்கூத்து என்ற இருவகைக் கூத்தின் இலக்கணம் நன்கு அறிந்தவன் ஆவான். அவற்றின் பலவகைப் பகுதிகளான கூத்துக்களும், பதினொரு வகையான ஆடல்களும், அவற்றிற்கு இசைந்த பாடல்களும் கொட்டும், இன்னதற்கு இன்ன சிறப்பு என விதிக்கப்பட்ட மரபுகளின் படி விளக்கமாக அறிந்தவனாகவும் அவன் விளக்கினான். இதனை,

**“இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து**

**பலவகை கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்**

**பதினோர் ஆடலும் பாட்டும் கொட்டும்**

**விதி மாண் கொள்கையின் விளங்க அறிந்து ஆங்கு”**(சிலம்பு. 3: 12 - 15)

என்னும் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. ஆடலாசான் ஆடல் நிகழ்ச்சியின் இயக்குநர் போல் திகழ்கிறார். இவரை இன்று நட்டுவனார் என்றும், ஆடலாசான் என்றும் அழைக்கின்றனர்.

**ஆடலாசிரியன் இயல்பு**

ஆடலாசிரியன், வகைக் கூத்து - புகழ்க் கூத்து, வேத்தியல் - பொதுவியல், தமிழ்க் கூத்து - ஆரியக் கூத்து என மாறுபட்ட இரண்டிரண்டாக வரும் அகக்கூத்து இலக்கணமும் புற நாடகமும் அறிந்திருத்தல். பாட்டு உறுப்பு பதினான்குடன் ஆடலைப் பொருத்தல். அல்லியம் முதலிய பதினொரு கூத்து வகை அறிதல். அக நாடகங்கட்கு உரிய இருப்பத்தெட்டு உருக்களை அறிதல். புறநாடக உறுப்பாகிய தேவபாணி முதலியன அறிதல். கூத்து விகற்பங்கட்கு உரிய வாச்சியக் கூறுகளை அறிந்திருத்தல்.

**இசையாசிரியன் இயல்பு**

யாழிசையும் குழலிசையும் வண்ணக் கூறுபாடுகளும் தாளக் கூறுபாடுகளும் மிடற்றுப் பாடலும் தண்ணுமை நிலையும் பதினோராடல் கூத்துகளும் அறிந்திருத்தலோடு அவற்றில் வல்லமையும் பெற்றிருத்தல் வேண்டும். இயற்றிய உருக்களை இசைகொள்ளும்படியும் சுவை (இரசம்) கொள்ளும்படியும் புணர்த்துப் பாடவேண்டும்.செந்துறை, வெண்டுறை ஆகிய இருவகைப் பாடலுக்கும் உரிய இயக்கம் நான்கும் அறிந்து, இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் ஆகியவற்றிற்கு ஏற்ப இசை கடைப்பிடித்து, இசை வேறுபாடுகளைக் குற்றமற அறிந்திருத்தல் வேண்டும்.

**இயல் கவிஞன் இயல்பு**

நான்கு எல்லைக்கு உட்பட்ட தமிழ்நாடு அறியும்படி முத்தமிழிலும் வல்லமை பெற்றிருத்தல் வேண்டும். வேத்தியல், பொதுவியல் என்னும் இருநாடக நூல் அறிவு பெற்றிருத்தல். பதினொரு பண் நீர்மை அறிந்து தாளம் பொருந்தப் பாடல் இயற்றுதல். வசையற்ற மொழிகளால் பாடல் இயற்றுதல் - முதலியன பாட்டு இயற்றுவோனுக்கு உரிய இயல்புகளாம்.

**குழல் ஆசிரியன் இயல்பு**

சித்திரப் புணர்ப்பும் வஞ்சனைப் புணர்ப்பும் அறிதல். பாடலாசிரியனைப் போல் ஒத்த அறிவுடைமை. ஊதும் துளைகளில் சுட்டு விரல் முதலாக விட்டுப் பிடிப்பது ஆரோகணம் - சிறு விரல் முதலாக விட்டுப் பிடிப்பது அவரோகணம்- இவற்றை அறிந்து ஒழுகல்.

**யாழ் ஆசிரியன் இயல்பு**

பதினான்கு கோவை பொலிந்து பாடல் இயல்புக்கு ஒத்திருத்தல். ஏழு பாலையினையும் இணை நரம்பாகத் தொடுத்து நிறுத்தல். பன்னிரு முறை திரித்துப் பன்னிரு பாலை பிறப் பித்தல். பெண்டிர்க்கு உரிய தானமாகிய பதினாறு கோவையிலே பொருந்தக் கூட்டல். எல்லாப் பாலைகளையும் ஒழுங்குறப் பிறப்பித்தல்.

**அரங்கின் இயல்பு**

நிலம்: நிலக் குற்றம் நீங்கிய இடத்தில் அரங்கு அமைத்தல். தெய்வத் தானம், பள்ளி, அந்தணர் இருக்கை, கூவம், குளம், கா ஆகியவற்றை அண்மையில் உடைத்தாதல். குழி - பள்ளம் படுகுழியின்மை - திண்ணியதாதல். மண் இனிய மணமும் சுவையும்

உடையதாதல். எலும்பு, உமி, பரல், உவர்ப்பு, ஈளை, பொடி - இவைகள் இல்லாதிருத்தல். ஊர் நடுவே - தேரோடும் தெருவிலே இருத்தல் - முதலியன, அரங்கம் அமைக்க வேண்டிய இடத்திற்கு இருக்க வேண்டிய இயல்புகளாம்.

**அரங்க மேடை**

நல்லிலக்கண ஆடவனது பெரு விரலால் 24 கொண்ட அளவுக் கோலால் அளந்த ஏழு கோல் அகலம் - எட்டுகோல் நீளம் - ஒரு கோல் உயரம் உடையதாய் அரங்க மேடை இருத்தல் வேண்டும். போக வர இரண்டு வாயில்கள் இருத்தல் வேண்டும்.

**அரங்க அமைப்பு**

மக்கள் வழிபட நால்வகைக் குலப் பூதங்களின் ஓவியங்கள் தீட்டி வைத்திருத்தல். தூணின் நிழல் விழாவாறு விளக்குகள் அமைத்தல். இடத் தூணிலையிலே உருவு திரையாக ஒருமுக எழினி அமைத்தல். இரு வலத் தூணிலையிடத்து உருவு திரையாக பொரு முக எழினி அமைத்தல். மேலே கூட்டுத் திரையாகக் கரந்துவரல் எழினி அமைத்தல். வேலைப்பாடு மிக்க ஓவியம் எழுதிய மேற்கட்டி அமைத்தல்.

**அரங்கினில் ஆடும் முறை**

அரங்கினில் மாதவி வலக்கால் மிதித்து அரங்கத்தின் வலது தூணைச் சார்ந்து நின்றாள். வலக்கால் மிதிப்பதும், வலது பக்கம் சார்ந்து நிற்பதும் மங்கல வழக்காகக் கருதப்பட்டன. இந்நிலை இன்றும் காணப்படுகிறது. தோரிய மகளிர் இடப்பக்கம் நிற்பர். ஆடி முதிர்ந்த பெண்களைத் தோரிய மடந்தை என்பர். இவர்கள் தாம் கற்றுணர்ந்த அசைவு நிலைகளை ஆடல் நங்கைக்குக் கற்பிப்பர். இவர்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் பழம் பாடல் ஒன்றின் மூலம் மேற்கோளிடுகிறார்.

**தலைக் கோலநிலை குணத்தொடு பொருந்தி**

**நலத்தகு பாடலும் ஆடலு மிக்கோள் இயற்படு**

**கோதைத் தோரிய மகளே (சிலம்பு: 3: 133 -134)**

முதலில் வாரம் பாடலும், வாரம் பாடிய பின்பு இசைக் கருவிகள் எல்லாம் கூடி இசைக்க அரங்கினில் புகும் நங்கை இறைவனையும் ஆசானையும், கலைஞர்களையும், சுவைஞர்களையும், தான் ஆடும் அரங்கினையும் வணங்குவாள். இதனை மலர்வழிபாடு என்பர். பின்பு பல்வகைக் கூத்துகளையும், ஆடல் வகைகளையும் ஆடுவாள்.

**மாதவி ஆடிய கூத்து**

மங்கலப் பண்ணாகவும் நரம்படைவுடன் நிற்கும் பாலைப் பண்ணை அதன் அழகு கெடாதபடி நான்கு உறுப்பும் சேர்ந்த சொற்களை நன்கு அறிந்து, அதிலே மூன்று ஒத்து உடையதாக எடுத்து ஓர் ஒத்துடைய ஏக தாளத்திலே முடித்து, அழகிய மண்டில நிலையால் கை குவித்து, அவிநயம் பிடித்து பாடல்களுக்கு இசைய மாதவி அழகு நடனம் ஆடினாள். இதனை,

**“மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்**

**பாற்பட நின்ற பாலைப் பண் மேல்**

**நான்கின் ஒரீஇய நன்கனம் அறிந்து**

**மூன்று அளந்து ஒன்று கொட்டி அதனை**

**ஐந்து மண்டிலத்தால் கூடை போக்கி**

**வந்த வாரம் வழி மயங்கிய பின்றை”** (சிலம்பு. 3: 148 - 153)

இப்பாடல் விளக்குகின்றது.

**கூத்து விளக்கம்**

“கூத்து” என்னும் சொல் “நாட்டியம்”, “நாடகம்” ஆகிய இரு கலைகளுக்கும் பொதுவானதாக வழங்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் “கூத்து”, “கூத்தர்” என்னும் சொற்கள் உள்ளன. சங்க இலக்கியங்களிலும் “கூத்து” என்னும் சொல் மிகுதியாக உள்ளது. “கூத்தர் ஆடுகளம் கடுக்கும்” (புறம். 20) “இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து” (சிலம்பு 3:12), “நாட்டியம் நன்னூல் நன்கு கடைப்பிடித்து” (சிலம்பு 3: 46), “நாடகமேத்தும் நாடகக் கணிகை” (சிலம்பு, பதிகம். 15) “கூத்தாட்டு அவைக்கறம்” (திருக். 332) என்று சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**நின்றாடும் கூத்து**

1. **அல்லியம்:** மாயவன் அல்லது கண்ணன் ஆடும் பத்துவகை நடனங்களில் அல்லியம் ஒன்றாகும். கம்சன் ஒரு யானையின் உருவம் எடுத்து வஞ்சகமான முறையில் கண்ணனைக் கொல்ல முயன்றதையும் அதன் கொம்புகளை முறித்துக் கண்ணன் அதனைக் கொன்ற முறையையும் இந்த ஆடல் மூலம் நடித்துக் காட்டப்பெறும்.
2. **கொடுகொட்டி:** கொடுங்கொட்டி என்பதே “கொடுகொட்டி” எனத் திரிந்தது என்று நச்சினார்க்கினியர் கூறுவார். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர், “கொள்ளைக் காதில் குழைக் காதில் குண்டைப் பூதம் கொடுகொட்டில் குனித்துப் பாட” (திருவெண்காடு, திருத்தாண்டகம், பாடல்.5) என்று தேவாரப் பாடலில் இக்கூத்தினைச் சுட்டுகின்றார்.
3. **குடையாடல்:** படைகளை இழந்து அரக்கர்கள் தோல்வி கண்ட நிலையில் ஆறுமுகன் வெற்றிக் குடை பிடித்து ஆடிய ஆட்டம் இது.
4. **குடம்:** வாணாசுரனால் கைது செய்யப்பட்ட காமனின் மகன் அநிருத்தனை விடுதலை செய்வதற்காகக் குன்றெடுத்தோனாகிய கண்ணன் குடத்தின் மீது ஆடியது.
5. **பாண்டுரங்கம்:** ஒரு போருக்கு ஆயத்தமாவதால் இந்த ஆடலில் வெளிப்படும் சுவை வீரமாகும். தேரின் முன் நிற்கும் நான்முகனின் முன்பாக முக்கண்ணன் அல்லது சிவன் ஆடிய ஆட்டத்திற்குப் “பாண்டரங்கம்” என்று பெயர். இதனைச்

சிலப்பதிகாரம். "தேர்முன் நின்ற திசைமுகன் காணப் பாரதியாடிய வியன் பாண்டரங்கமும்" (சிலம்பு 6:44-45) என்று குறிப்பிடுகின்றது.

6. **மல்லாடல்:** கண்ணன் ஒரு மல்லனைப் போன்று உருமாறி வாணனை முறியடிக்கச் செல்லும்போது அவனால் ஆடப்பெற்ற ஆடலை "மல்லாடல்" என்று கூறுவர். கண்ணன் தனது எதிரியைப் பேரொலி செய்து அழைத்து அவன் வந்ததும் ஓடிச்சென்று பிடித்துக் கொன்று விடுவதை நடித்துக் காட்டுவது இந்த ஆடலாகும். இதன் மூலம் வெளிப்படும் சுவைகள் கோபம், வீரம் ஆகியவையாகும்.

**வீழ்ந்தாடும் கூத்து**

1. **துடிக்கூத்து:** மாற்றுருவில் சூரன் உடலுக்குள் தந்திரமாகச் சென்று மறைந்து கொண்ட போது முருகன் ஆடிய ஆட்டத்தைத் "துடிக்கூத்து" என்று கூறுவர். முருகன் அவனைக் கண்டுபிடித்ததும் உணர்ச்சி மிகுதியில் கடல் அலையையே அரங்கத் திரையாகக் கொண்டு துடிக்கூத்து ஆடுகிறான். சிறிது நேரத்தில் எதிரியைக் கொன்று மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து ஆடுகிறான். இன்பமும் வீரமும் ஆடலின் மூலம் வெளிப்படும் சுவையாகும்.
2. **பேடியாடல்:** தன் மகனை விடுவிக்கக் காமன் பேடி உருக்கொண்டு கண்டோர் வியக்கும்படி ஆடியது.
3. **மரக்காலாடல்:** அரக்கர்கள் ஏவிய பாம்பு, தேள் போன்ற நச்சுப்பூச்சிகளை நசுக்கிக் கொல்வதற்காக மரக்கால் கொண்டு கொற்றவை ஆடியது. இம்மரக்காலாடல் ஆட்டமே இன்றைய பொய்க்கால் குதிரை ஆட்டத்திற்கான முன்னோடி ஆட்ட வடிவமாகக் கருதப்படுகிறது.
4. **பாவையாடல்:** அவுணர்களின் போர்க்கோலம் ஒழிவதற்காகத் திருமகள் ஆடியது.
5. **கடயம்:** இந்திரனின் மனைவியான அயிராணி வயலில் உழவனின் மனைவி வடிவில் ஆடியது. இவ்வகை ஆடல்கள், ஆடற்கலை இலக்கணத்துடன் மிகவும் நேர்த்தியாக ஆடப்பெற்ற நிலையை அறிய முடிகிறது.

**மக்களின்கூத்து**

**வள்ளிக்கூத்து:** வள்ளிக்கூத்து எனப்படுவது நடைமுறையில் உள்ள 'வள்ளி'யின் கதையைப் பின்பற்றி அமைவதாகும். காலங்காலமாகத் தொடர்ந்து வரும் இக்கூத்து அதன் கதைத் தன்மையால் வாடாமல் (அழியாமல்) நின்று செழித்துள்ளது என்பதை "வாடா வள்ளியின் வளம் பல தரூஉம்" (பெரும். 370) என்ற பெரும்பாணாற்றுப்படைப் பாடல் அடி விளக்குகிறது.

**துணங்கைக் கூத்து:** துணங்கைக் கூத்து எனும் கூத்தானது மகளிர் கை கோத்துக் கொண்டு நடத்திக்காட்டிய கலையாகச் சங்க காலத்தில் விளங்கியது. இளம் பெண்கள் இறைவழிபாட்டின்போது இவ்வகை நிகழ்வுகளை நடத்திக்காட்டியிருக்க வேண்டுமெனக் கருதலாம். "எல்வளை மகளிர் துணங்கை" (குறுந். 364: 5 – 6) எனும் குறுந்தொகைப் பாடல் அடியும் துணங்கைக் கூத்து குறித்துப் பொதுவாகப் பேசுகிறது.

**குரவைக் கூத்து:** மிகவும் பழமையான கூத்து வகைகளுள் குறிப்பிடத்தக்கது குரவைக்கூத்து ஆகும். மக்களிடையே செல்வாக்குப் பெற்ற கலையாக இது விளங்கியது. இக்கூத்தானது பின்னணி இசைக்கு ஒப்ப, பல கலைஞர்கள் சேர்ந்தாடும் வகையில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியதாகும். 'மன்று தொறு நின்ற குரவை' (மதுரைக். 615) என்ற மதுரைக்காஞ்சிப் பாடல் அடியும், 'வேங்கை முன்றில் குரவை' (நற். 276: 1) என்ற நற்றிணைப் பாடல் அடியும் குரவைக் கூத்தின் செல்வாக்கினைக் குறிப்பிடுகின்றன. மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல் கலையினைத் தவிர்த்து சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை ஆகியன குறித்த செய்திகளை விரிவாகத் தருகின்றது.

**முடிவுகள்**

- சங்க காலம் முதல் சிலப்பதிகார காலம் வரை எவ்வகையான இசைக் கருவிகள் இருந்தன என்பதனை அறிய முடிகின்றது.
- ஆடலினைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியன் எவ்வகையான ஆடலினைக் கற்றுக்கொடுத்தார் என்பதனை இதன் வழி அறிய முடிகின்றது.
- அரங்கேற்றம் செய்த பின்பு பல்வேறு பயிற்சிக்குப் பின்பே அனைவரும் காணுமாறு அரங்கேற்றம் செய்துள்ளனர். அதற்கு முறையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

## References

இளம்பூரணர் (உரையாசிரியர்). தொல்காப்பியம் – பொருளதிகாரம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

பொ.வே. சோமசுந்தரனார். குறுந்தொகை. கழக வெளியீடு, சென்னை.

நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்). நற்றிணை. உ.வே.சா. நூலகம், சென்னை.

பரிமேலழகர் (உரையாசிரியர்). திருக்குறள். பூம்புகார் பதிப்பகம், சென்னை.

ஞா. மாணிக்கவாசகன். சிலப்பதிகாரம். உமா பதிப்பகம், சென்னை.

ஞா. மாணிக்கவாசகன். பத்துப்பாட்டு (தொகுதிகள் 1 & 2). நான்காம் பதிப்பு, உமா பதிப்பகம், சென்னை.

திவாகர நிகண்டு. கழக வெளியீடு, சென்னை.